**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் நாள் செவ்வாய்கிழமை**

**O.S.72/2022**

வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரின்ஸ் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | அருள்சிங் | கிராமம் | : | பெருந்தரக்குடி |
| ஜாதி | : | | தொழில் | : | வாதி நிறுவன தொழிற்சாலை பங்குதாரர் |
| சமயம் | : | | வயது | : | 45/25 |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

2. கடந்த 27.01.1999 ம் தேதிய எங்கள் நிறுமம் பெயரில் தாவா சொத்தினை கிரயம் பெற்றதற்கான திருவாரூர் **சார்பதிவக ஆவண எண்.139/1999 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1** ஆகவும், கடந்த 12.10.2022 தேதியில் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான **பட்டா கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2** ஆகவும், கடந்த 23.12.1998 தேதியில் எங்கள் நிறுமம் பதிவு செய்யப்பட்டதற்கான **பதிவுச்சான்று**

**நோட்டரி பதிவு நகல் வா.சா.ஆ.3** ஆகவும், கடந்த 05.10.2022 தேதியில் 11ம் பிரதிவாதி எங்கள் நிறுமத்திற்கும், 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் அனுப்பிய **அறிவிப்பின் சார்வு நகல் வா.சா.ஆ.4** ஆகவும், 1 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 21.09.2021 ம் தேதியன்று எங்கள் நிறுமத்திற்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக வெளியிடப்பட்ட **பொது விளம்பர அறிவிப்பு - பிரதிநகல் வா.சா.ஆ.5** ஆகவும், 1 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் எங்கள் நிறுமத்திற்கு எதிராக கடந்த 10.10.2022 ம் தேதியில் சாலை மறியல் போராட்டம் நடத்துவற்காக வெளியிடப்பட்ட **பொதுவிளம்பர அறிவிப்பு - பிரதி நகல் வா.சா.ஆ.6** ஆகவும், கடந்த 09.10.2022 தேதியில் எங்கள் நிறுவனத்தின் மேலாளர் 11ம் பிரதிவாதியிடம் நிறுமத்திற்கு பாதுகாப்பு வழங்க கொடுத்த **கடிதத்தின் அலுவலக நகல் வா.சா.ஆ.7** ஆகவும், கடந்த 15.09.2009 தேதியில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வழங்கிய ஒப்புகை மற்றும் 10.07.2002 தேதிய மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வழங்கிய நிரந்தர **பதிவுச்சான்றிதழ் - நோட்டரி சான்று நகல் வா.சா.ஆ.8** ஆகவும், கடந்த 22.07.2020 தேதியில் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கம் வழங்கிய **பதிவுச்சான்றிதழில் நோட்டரி சான்று நகல் வா.சா.ஆ.9** ஆகவும், கடந்த 30.07.2008, 29.11.2010, 30.11.2012 மற்றும் 28.11.2014 ஆகிய தேதிகளில் துணைதலைமை தொழிற்சாலை ஆய்வாளர் **வழங்கிய சான்று - நோட்டரி நகல் வா.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

// கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.07.29 17:40:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.